# உங்களது நாணயத் தாள்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

## பின்வரும் பாதுகாப்புப் பண்புகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பண்புகளை பரிசோதியுங்கள்

### 1 நீர்வரி அடையாளம்

ஒவ்வொரு நாணயத்தாளினதும் நீர்வரி அடையாளமாக வெவ்வேறுபட்ட உள்ளூர் பறவைகளின் தோற்றம் காணப்படுவதுடன் இதே பறவையே தாளிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பெறுமதி தெளிவான நீர்வரி அடையாளமாக இலக்கங்களில் நிலைக்குத்தாகக் காணப்படுகிறது.




### 2 மேற்கிளம்பிய அச்சிடல்

தாளின் குறுக்குப் பக்கமாக உங்களின் விரல்களை ஓடவிடுவதன் மூலம் மேற்கிளம்பிய அச்சிடல் பகுதியொன்றினை உணரமுடியும். (உ-ம்: மத்திய வங்கியின் பெயர், தொடுவதன் மூலம் உணரக்கூடிய நாடா வடிவிலான ஒரு பகுதி, மத்தியிலுள்ள பிம்பம் போன்றன).




### 7 மேலதிகமான சிறிய எழுத்துரை

மிக நெருக்கமாகப் பார்க்கும் பொழுது CBSL மற்றும் பெறுமதி என்பனவற்றை பார்க்கக்கூடியதாயிருக்கும்.






### 3 தொடுவதன் மூலம் உணரக்கூடிய கோடுகள்

நாணயத்தாளின் இரண்டு பக்கத்திலுமுள்ள கோடுகளை மேற்கிளம்பிய அச்சிடல் பகுதிகளாக அடையாளம் காணமுடியும்.



### 6 பார்வையற்றவர்களும் அறியக்கூடிய பண்பு

பார்வை பாதிக்கப்பட்டவர்களும் நாணயத்தாளின் பெறுமதியினைத் தெரிந்துகொள்ள உதவும் விதத்தில் நாணயத்தாளின் இடது பக்கத்தில் காணப்படும் நாணயத் தாளின் பெறுமதிக்கேற்ப அதிகரித்துச் செல்லும் விதத்தில் நெருக்கமான முறையில் புள்ளிகள் நிலைக்குத்தாக அச்சடிக்கப்பட்டிருந்கின்றன (ரூ.20 நாணயத்தாள்களுக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையில்)



### 4 பாதுகாப்பு நூல்

பாதுகாப்பு நூல்கள் நாணயத்தாள் ஒவ்வொன்றிற்குமிடையில் வேறுபடுகின்றதுடன் CBSL என்ற எழுத்துக்களும் பெறுமதியும் அதில் காணப்படுகின்றன. உ-ம். ரூ.20, ரூ.100.

சிவப்பிலிருந்து பச்சைக்கு மாற்றமடைகின்ற விதத்தில் யன்னல் வடிவில் காணப்படும் ஸ்டார்குரோமின் அகலம் ரூ.5,000, ரூ.1,000 மற்றும் ரூ.500 நாணயத்தாள்களில் முறையே 3 மிமீ, 2.5 மிமீ, 2 மிமீ ஆகக் காணப்படுகிறது.

ரூ.100, ரூ.50 மற்றும் ரூ.20 தாள்களிலுள்ள நூலானது நாணயத்தாள்களில் பதிக்கப்பட்டிருக்கிறது.





### 5 வெளிச்சத்தினூடாகப் பார்த்தல்

தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும் பொழுது தாளின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் உள்ள பெறுமதி இலக்கங்கள் ஒன்றுடன் ஒன்று கச்சிதமாக பொருந்துவதனைக் காண்பீர்கள்.




- நாணயத்தாள்கள் உருச்சிதைப்பதோ அல்லது போலி நாணயத்தாள்களை அச்சிடுவதோ குற்றமாகக் கருதப்படும்.
- நாணயத்தாள்களை கவனமாகப் பாவியுங்கள் தேசிய செல்வத்தினைப் பாதுகாக்கும் விதத்தில் அவற்றை தூய்மையாக வைத்திருங்கள்.


நாணயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

☎ +94 112477587 🖷 +94 112477726 @ currency@cbsl.lk